# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 60 | தொலைபேசி: 23411 | நிறுவியது 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 | ஆடி 24 | ஷஃபான் 11 | (8-8-76) ஞாயிறு | புத்தகம் 30, | இதழ் 34


## பிரதமருக்கு தந்தை செல்வா அவசரத் தந்தி!

**"சாகும்வரை உண்ணுவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்கள்மீது சிறைச்சாலைகளில், சிறையதிகாரிகளினுலோ அல்லது ஏனைய சிறைக் கைதிகளினுலோ ஏதாவது வன்முறை பிரயோகிக்கப்படுமானுல் அரசாங்கமே அதற்குப் பதில் சொல்லவேண்டும்."**

—இவ்வாறு உண்ணுவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களை வெலிக்கடைச் சிறையிலிருந்து பிரித்து வெவ்வேறு சிறைகளுக்கு அனுப்பியதை ஆட்சேபித்து பிரதமருக்கு விடுதலைக் கூட்டணித் தலைவர் மூதறிஞர் செல்வா அனுப்பியுள்ள அவசரத்தந்தியில் குறிப்பிட்டிருக்கிறுர்.

இதுபோன்ற ஆட்சேபத் தந்திகளை தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உ. க்கள் பலரும் பிரதமருக்கு அனுப்பி வைத்திருக்கிறுர்கள்.

இத்தந்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:—

தங்களை விடுதலை செய்யாவிடின், அல்லது விசாரணைக் குட்படுத்தாவிடின், சாகும் வரை உண்ணுவிரதமிருக்கப் போவதாக அறிவித்திருந்த

# உண்ணுவிரதிகள் மீது வன்முறை பிரயோகிக்கப்பட்டால் அரசே பதில் சொல்லவேண்டும்'

தமிழ் இளைஞர்களை வெலிக்கடைச்சிறையிலிருந்து காலி, மாத்தறை, நீர்கொழும்பு போன்ற சிறைகளுக்கு மாற்[...]றியதாக அறிகிறேன். ஆண்டுக்கணக்காகவும், மாதக்கணக்காகவும் விசாரணை[யின்]றி அடைத்துவைக்கப்பட்டிருக்கும் இந்த இளைஞர்களுக்கு, நீதியைக்கோரி உண்[ணு]விரதமிருப்பது ஒன்றுதான் ஒரேயொரு



அஹிம்சை வழியாக இருக்கிறது.

இந்த இளைஞர்கள்மீது சிறையதிகாரிகளினுலோ அல்லது ஏனைய கைதிகளி

—5-ம் பக்கம் பார்க்க

● வெலிக்கடையிலிருந்து பிரிக்கப்பட்டோர்;

### எங்கெந்தச் சிறைகளில் எங்கெந்த இளைஞர்கள்!

காலிச் சிறைச்சாலையில்;
வண்ணை ஆனந்தன்.

மாததுறை சிறைச்சாலையில்;
காசிஆனந்தன், முத்துக்குமாரசாமி

நீர்கொழும்பு சிறைச்சாலையில்;
சத்திய சீலன்
அல்போன்சோ மேரி

கிங்ஸ் வீதி (றஜ வீதி) கண்டியில்;
மாவை சேனுதிராசா.

போகம்பரைச் சிறையில்;
வரதராசா
வசந்தகுமார்
சிறீஸ்கந்தராசா

அனுராதபுரம் சிறையில்;
ஆனந்தகுமார்
ஜீவராசா
இரத்தினபாலா

● இவர்களில் வண்ணை ஆனந்தன், காசி ஆனந்தன் சத்தியசீலன் மாவை சேனுதிராசா, சிறீஸ்கந்தராசா, பூபதிபால வடிவேற்கரசன், அ. வரதராசா, முததுக்குமாரசாமி, திசைவீரசிங்கம் ஆகியோர் தற்போது உண்ணுவிரதமிருக்கிறுர்கள். திசை வீரசிங்கம் எங்கு வைக்கப்பட்டிருக்கின்றுர் என்பது இதுவரை தெரியவில்லை.

# சிங்களச் சிறைகளில் 9 இளைஞர் சாகும்வரை உண்ணுவிரதம்!

## இளைஞர்களை பார்ப்பதற்கு அனுமதிமறுப்பு!

ஆண்டுக்கணக்காக விசாரணையின்றி சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள், ஏற்கெனவே பிரதமருக்கு அறிவித்திருந்தபடி தங்கள் சாகும்வரை உண்ணுவிரதத்தை ஆகஸ்ட் ஐந்தாம் நாள் ஆரம்பித்திருக்கிறுர்கள். காசி ஆனந்தன், மாவை சேனுதிராசா, பொ. சத்தியசீலன், த. முத்துக்குமாரசுவாமி, பொ. வ. திசைவீரசிங்கம் ஆகியோர் திட்டமிட்டபடி ஆகஸ்ட் 5ம் நாளில் தமது உண்ணுவிரதத்தை ஆரம்பித்தனர்.

ஆகஸ்ட் 8ம் நாள் (இன்று) வண்ணை ஆனந்தன் அ. வரதராசா, சே. சிறீஸ்கந்தராசா, பூபதிபால வடிவேற்கரசன் ஆகியோர் தங்கள் உண்ணுவிரதத்தை ஆரம்பிக்கிறுர்கள்.

சிறையில் தமிழ் இளைஞர்கள் உண்ணுவிரதம் ஆரம்பித்ததைத் தொடர்ந்து, சிறையிருக்கும் தமிழ் இளைஞர்கள் எவரையும் சென்று பார்ப்பதற்கு சிறை நிர்வாகம் அனுமதி மறுத்துள்ளது. இரத்த உறவுடையவர்கள் (அதாவது தாய், தந்தை சகோதர சகோதரிகள்) மட்டுமே இந்த இளைஞர்களை சென்றுபார்ப்பதற்கு இதுவரை அனுமதிக்கப்பட்டு வந்தது. இப்போது இதுவும் மறுக்கப்பட்டுவிட்டது.

ஆகஸ்ட் 5க்கு முன்னர் தங்களை விடுதலைசெய்ய வேண்டுமென்றும் அன்றேல் நீதி விசாரணைக்குட்படுத்தி பிணையில் விடுதலைசெய்ய வேண்டுமென்றும் இவற்றைச்செய்யத் தவறினுல் ஆகஸ்ட் 5ம் நாளிலிருந்து சாகும்வரை உண்ணுவிரதத்தை ஆரம்பிக்கவிருப்பதாகவும் சிறையிருக்கும

—5-ம் பக்கம் பார்க்க

## நாடெங்கும் அனுதாப உண்ணுவிரதங்கள்!

சிறையில் தமிழ் இளைஞர்கள் ஆரம்பித்துள்ள சாகும் வரை உண்ணுவிரதத்துக்கு ஆதரவும் அனுதாபமும் தெரிவித்தும், அதன்பால் மக்களினதும் அரசினதும் கவனத்தை ஈர்க்கவும்

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “விடுதலைப் போராட்டங்களின் மூலவித்து தாய்மொழியே!”

## நீர்கொழும்பில் நாவலர் அமிர்தலிங்கம் பேச்சு!



மொழி வாழ்ந்தால் தான் இனம் வாழும்; மொழி அழிந்தால் இனமும் அழிந்து விடும். உலகத்தில் நடைபெற்ற பல்வேறு நாடுகளின் விடுதலைப் போராட்டங்களுக்கு மூலவித்தாக இருந்தது மொழிதான். அயரிஷ் மக்களும், கொரிய மக்களும், வியட்நாம் மக்களும், யூத மக்களும் மொழியை அடிப்படையாகக்கொண்டு தான் தங்கள் நாடுகளை விடுதலையடையச் செய்தார்கள்; விடுதலைப் போராட்டத்தை நடத்தினார்கள். அந்த அடிப்படையில்தான் தமிழ் மக்கள் தங்கள் மொழியையும் பண்பாட்டையும் மறந்து வடமொழிக்கு அடிமையாகிக்கிடந்தபோது அவர்களிடையே மறுமலர்ச்சியை தோற்றுவித்து, தமிழின் பெருமையையும் உயர் தனிச் செம்மையையும் உணரச் செய்து, தமிழர்களைத் தமிழர்களாக்கும் பணியில் மறைமலையடிகள் ஈடுபட்டார்.

—இவ்வாறு நீர்கொழும்பு இந்து இளைஞர்களால், நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் கொண்டாடப்பட்ட மறைமலையடிகள் நூற்றுண்டு விழாவில் கலந்து கொண்டு பேசிய நாவலர் அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

திரு. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில், திரு. சண்முகநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

“தமிழ்மொழி தனித்தியங்கும் ஆற்றல் படைத்த உயர்தனிச் செம்மொழி என்பதை தமிழர்களே மறந்து, வடமொழியின் சப்தத்தில் மயங்கி, தமிழையும் வடமொழியையும் கலந்து மணிப்பிரவாள நடையிலே எழுதுவதை ஒரு பெருமையாகக்கருதிக் கொண்டிருந்த காலத்தில் மறைமலையடிகள் தமிழ் மக்கள் மத்தியிலே ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். சுவாமி வேதாசலம் எனும் தமது பெயரையே மறைமலையடிகள் என மாற்றியமைத்தார். இன்று இந்நாட்டில் வேற்று மொழியொன்றை தமிழ் மொழிக்குள் திணித்து தமிழ் மொழியை அழிக்கும் முயற்சி நடக்கிறது. இந்த ஆபத்தைத் தடுத்து நிறுத்த தமிழ் மக்கள் மறைமலையடிகளார் காட்டிய பாதையில் நின்று தீவிரமாக உழைக்கவேண்டும்.”

திரு. ஈழவேந்தன் பேசுகையில் கூறியதாவது:—

“மறைமலையடிகள் தமிழுக்கு ஆற்றிய பணி காலத்தால் அழியாதது. அவர் தமிழுக்கு மட்டும் தொண்டாற்றியவரல்லர். பல்வேறு துறைகளில்—பல்வேறு நிலைகளில் தமது திறனை வெளிப்படுத்தியவர். மொழியே ஓர் இனத்தின் ஆத்மா என்பதை தமிழ் மக்களுக்கு உணர்த்திய அவர், தமிழர்களின் சமய நெறியை உணர்த்தியதுமட்டுமன்றி, நாவல்கள் கூட எழுதினார். தமிழ் நாட்டில் தூய தமிழ்ப் பெயர்கள் இடம்பெறத் தொடங்கியது மறைமலையடிகள் தொடக்கிய தனித்தமிழியக்கத்தின் பின்புதான். தமிழர்கள் வீட்டில் பேசுவது ஆங்கிலம், அலுவலகம் சென்றால் சிங்களம், கோவிலுக்கு போனால் வடமொழிக் கூச்சல், திருமணத்துக்கு போனால் அங்கும் வடமொழி, என்று இப்படி எங்கும் தமிழன் தமிழுக்கு இடம்தராமல் வேற்று மொழிக்கே முதலிடம் தருகிறான்—இந்நிலைமாறி, எங்கும் தமிழர் எதிலும் தமிழாக வேண்டும்!”

சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவைமகேசன் பேசுகையில் கூறியதாவது.

“ஒருபெரும் தமிழ் மலையாக விளங்கிய மறைமலையடிகள், தமிழ் கூறும் நல்லுலகில் ஏற்படுத்திவைத்த மாற்றங்கள் பல. தமிழகத்தில் நாராயணசாமி நெடுஞ்செழியனாவதற்கும், சோமசுந்தரம் மதியழகனாவதற்கும் காரணம் மறைமலையடிகள் தோற்றுவித்த மறுமலர்ச்சியே. மறைமலையடிகள், வெறும் தமிழ் அறிஞராக—சைவ அறிஞராக மட்டும் இருந்துவிட்டுப் போகவில்லை. தமிழுக்கு இந்தி மொழியால் ஆபத்து ஏற்பட்ட போது — 1937ம் ஆண்டு கட்டாய இந்தியை ராஜாஜி திணித்தபோது, அதை எதிர்த்து சென்னையில் மாபெரும் இந்தி எதிர்ப்பு மாநாட்டை நடத்தி தமிழர்களைத் தட்டியெழுப்பியவர் மறைமலையடிகள். அந்த மாநாட்டில் அறிஞர் அண்ணா பெரியார் ஈவேரா, கி. ஆ. பெ. விசுவநாதம் போன்றவர்கள் கலந்துகொண்டார்கள். இந்தி எதிர்ப்பு மாநாட்டைத்தொடர்ந்து நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும் —டு பட்டு குடும்பத்துடன் சிறை சென்றவர் மறைமலையடிகள். அவர் காட்டிய வழியில் நின்று, தமிழின் தனித்துவத்தைக்காக்கவும், தமிழ் மீது சிங்களம் செலுத்தும் ஆதிக்கத்துக்கு எதிராகப்போராடவும் நாம் உறுதி பூணவேண்டும்”

திரு. ஆ. ரகுபதிபாலசிறீதரன் பேசுகையில்-மறைமலையடிகள் வழியில் நின்று தமிழ் இனமும், மொழியும் வாழவும் தமிழ் ஈழம் விடுதலை பெறவும், தமிழ் இளைஞர் போராடவேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

---

# “தமிழ்ஈழக் கோரிக்கை எழுந்த காரணம் என்ன?”

## கல்முனை பொலிசாருக்கு உதுமாலெவ்வைவிளக்கம்!

**கல்முனையில் 31-7-76ல் நடைபெற்ற சட்டமறுப்பு இயக்கத்தின் போது தமிழ்பேசும் மக்கள் தமிழ் ஈழக்கோரிக்கையை முன்வைத்திருப்பதற்கான காரணங்களை விளக்கி கல்முனை பொலிசாருக்கு கல்முனை தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் டாக்டர் ஆ. உதுமாலெவ்வை வாக்கு மூலம் அளித்தார். அங்கு நடந்த சம்பவங்களை இதோ அவரே கூறுகிறார், படியுங்கள்!**

“31-7-76ல் எனதும், கந்தையா நொத்தாரிசு அவர்களதும் தலைமையில் பலர் சேர்ந்து தமிழ்ஈழம் கோரும் சட்டமறுப்பு சுவரொட்டிகளை கல்முனையில் உள்ள அரசாங்க, தனியார் கட்டிடச் சுவர்களில் ஒட்டினோம். இறுதியாக காவல் நிலையத்திற்குச்சென்று காவலர்களிடம், நாங்கள் உங்கள் சட்டத்தை மீறி இந்தச் சுவரொட்டிகளை ஒட்டுகின்றோம். உங்களால் இயன்ற நடவடிக்கைகளை எடுங்கள். நாங்கள் சட்டத்தைமீறும்போது நீங்கள் சும்மா பார்த்துக்கொண்டிருப்பது தமிழ் ஈழத்தில் உங்கள் ஆட்சி செத்துவிட்டது என்பதையே காட்டுகிறது என்று கூறினோம். அப்போது என்னையும் திரு. கந்தையா நொத்தாரிசு அவர்களையும் காவல் நிலையத்துள் அழைத்துச்சென்று சுவரொட்டியில் உள்ள வசனங்களை மொழிபெயர்க்குமாறு கூறினார்கள். நான் மொழிபெயர்த்துக் கூறியதுடன் கையிலிருந்த மற்றொரு சுவரொட்டியாகிய இலங்கை வரைபடத்தையும் காட்டி எமது தமிழ்ஈழ எல்லையையும் விபரித்துக் கூறினேன்.

இலங்கை ஒரு நாடாக இருப்பதை ஏன் நீங்கள் விரும்பவில்லை எனக்கேட்டனர். (சகலரும் சிங்களக் காவலர்கள்) நாம் நமது உரிமைகளைப்பெற முயன்ற முயற்சிகளையெல்லாம் விளக்கி இவற்றுக்கெல்லாம் உங்கள் இனம் ஒத்துவராத காரணங்களால் நாங்கள் பிரிவதைத்தவிர வேறு வழி எங்களுக்கு இல்லையென்பதால் இந்த முடிவுக்கு வந்தோம். இந்த முடிவுக்கு நாங்கள்வர உங்கள் இனந்தான் காரணமேயன்றி நாங்கள் இல்லை எனக் கூறினேன்.

கடைசியாக, என்னையும் திரு. கந்தையா அவர்களையும் முறைப்பாடு பதிவு செய்துவிட்டுப் போகுமாறு கூறினார்கள். முறைப்பாட்டை சிங்களத்தில் எழுத முயன்றபோதும் ஆங்கிலத்தில் எழுத முயன்றபோதும் நாங்கள் ஏற்க மறுக்கவே ஓர் தமிழ் காவலரை அழைத்துவந்து தமிழில் எழுதச் சம்மதித்தனர்.

நான் முதலாவதாக எனது முறைப்பாட்டைக் கூறினேன். அதில் கீழ்கண்டவாறு கூறியுள்ளேன்.

இந்த நாட்டின் அரசியல் சட்டம் தமிழ்ப்பேசும் மக்களின் சுதந்திரத்தையும் இறைமை, தன்னாதிக்கம் ஆகியவற்றையும் தரமறுப்பதாலும் இந்த நாட்டுத் தமிழ்ப்பேசும் மக்களுக்கு எவ்வித பாதுகாப்பையும் வழங்காத முறையில் அமைக்கப்பட்டிருப்பதாலும், தமிழ்ப்பேசும் மக்கள் தங்கள் உரிமைகளைப்பெற அவ்வப்போது ஆட்சிசெய்த, செய்து வருகின்ற சிங்கள அரசுகளோடு மேற்கொண்ட ஒவ்வொரு முயற்சியும் தோல்வியில் முடிந்ததாலும், நாங்கள் வாழவேண்டுமாயின் நாங்களே எங்களை ஆளவேண்டும் என்ற முடிவுக்கு வந்திருப்பதாலும் நாங்கள் இந்த நாட்டை இரண்டாகப் பிரித்து 1619ம் ஆண்டு போர்த்துக்கீசர் இந்த நாட்டைக் கைப்பற்றியபோது இருந்ததுபோல் தமிழ் இராச்சியத்தை மீண்டும் புனர் நிர்மாணம்செய்யும் முயற்சியை மேற்கொண்டுள்ளோம் இம்முயற்சியின் ஓர் கட்டமாகிய சனநாயக சாத்வீகப்போராட்டத்தின் ஓர் அங்சமாக இன்று தமிழ் ஈழம் முழுவதும் அரசின் சட்டத்தை எதிர்த்து தங்களின் பார்வைக்குத் தரப்பட்டுள்ள சுவரொட்டிகள் போன்ற சுவரொட்டிகள் ஒட்டப்படுகிறது. தமிழ் ஈழத்தின் ஓர் பகுதியாகிய கல்முனையில் எனது தலைமையில் நான் உங்கள் அரசின் சட்டத்தை எதிர்த்து சுவரொட்டிகளை ஒட்டுகின்றேன்; ஒட்டுவதற்கு என்னை ஆளாக்கிக் கொள்கின்றேன்.

மேற்கண்டவாறு எனது வாக்கு மூலத்தைக்கொடுத்து ஒப்பமிட்டேன். பின் திரு. கந்தையா அவர்களும் நான் கூறியவற்றையே அப்படியே கூறி அவரும் ஒப்பமிட்டார். பின்னர் எங்களை வீடுசெல்ல அனுமதித்தனர். மிகுதியாக இருந்த சுவரொட்டிகளை நாங்கள் அனைவரும் சேர்ந்து மீண்டும் ஒட்டத்தொடங்கி ஒட்டிமுடித்தோம்.

இந்தப் போராட்டத்தில் எங்கள் இருவருடன், பல தமிழ் முஸ்லீம் இளைஞர்கள் எதற்கும் தயார் (மறியல் செல்லவும்) எனக் கலந்து கொண்டனர்.”

---

## ஒரு நாளில்....

ஊதாங்குழலும் வக்காய் மாறும்
உலக்கைகளோர் நாள் சிலம்பங்களாடும்
சாதாரணரும் சமரனாய் மாறுவார்
சரித்திரம் ஈது சன்னதமாகும்

சாதிக் கொடுமைகள் சடாரெனச் சரியும்
சமாதானங்கள் எங்கிலும் விரியும்
நீதித்தாய் முகம் புன்னகை புரியும்
நித்தியமெங்கள் சத்தியம் ஒளிரும்

—திருமதி: பிலோமினாலோறன்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையில் தீட்டப்படும் புதிய சிலப்பதிகாரம்!

**அன்பு நண்பா,**

இந்தக்கிழமை எதை எழுதுவேன் உனக்கு? எதையுமே எழுதிடத் தோன்றவில்லை எனக்கு! இதயம் கனக்கிறது—சில வேளைகளில் உடல் சல்லிட்டுப்போவதுபோன்ற உணர்ச்சி! கண்களோ செந்நீரைக்கொட்டுகின்றன; குருதி கொதிப்பேறுகிறது; கோபக்கனல் பொங்குகிறது; இப்படிப் பல்வேறு உணர்ச்சியலைகளுக்குள் தவித்துக்கொண்டிருக்கிறேன்!

ஆம் நண்பா, நம்முடைய அருமை உடன்பிறப்புக்கள் — சிறையில் வாடும் செந்தமிழ்ச் செல்வங்கள் — வாராதுவந்த மாமணிகள் — தமிழ் ஈழத்தின் கட்டித்தங்கங்கள் — தங்களைத்தாங்களே அழித்துக்கொள்ளும் உச்சக் கட்டத் தியாகப் போரில் ஆகஸ்ட் 5ம் நாளிலிருந்து தங்களை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார்கள்! அநியாயத்துக்கு எதிராக — அக்கிரமத்துக்கு எதிராக—ஆட்சியாளர்களின் கொடுமைக்கு எதிராக — உண்ணாநோன்பு மேற்கொண்டு உயிர்விடுகின்ற ஆன்மீகப் போராட்டத்தில் அவர்கள் தங்களைத் தாங்களே ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார்கள்! உள்ள உயிர் ஒன்றுதான் — அது போகப்போவதும் ஒரு தடவைதான்; அது தமிழ்ஈழ மக்களின் உள்ளங்களிலே சுதந்திரத்தீயை மூட்டிவிடவாவது பயன்படட்டும் என்கிற முடிவுடன் அவர்கள் தங்களைப் பலிதந்துகொண்டிருக்கிறார்கள்!

ஆகஸ்ட் 5ம் நாளுக்குமுன்னர், எங்களை விடுதலை செய்யவேண்டும் அல்லது நீதி விசாரணைக்குட்படுத்தவேண்டும்; இந்த இரண்டில் ஒன்றை அரசு செய்யத்தவறினால் ஆகஸ்ட் 5ம் நாளிலிருந்து உண்ணா நோன்பு மேற்கொண்டு உயிரை விடுவோம் என்று பகிரங்கமாக பிரதமருக்கு அறிவித்திருந்த நம்முடைய உடன்பிறப்புக்கள் — ஆட்சியாளர் அசைந்து கொடுக்காத காரணத்தினால் — அவர்களது ஆணவத்தை அசைக்கின்ற சக்தி அறத்துக்கு மட்டுமே உண்டு என்ற அசையாத நம்பிக்கையுடன் தங்கள் உயிரையே அர்ப்பணிக்கின்ற புனிதமான தியாக வரலாற்றை இன்றைக்கு சிறைச்சாலைகளிலே தீட்டிக்கொண்டிருக்கின்றனர்.

**மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்—கையிற் சிலம்பும் கண்ணீருமாக பாண்டியனது அவையிலே நீதி கேட்டுப் போராடிய கற்பின் செல்வி கண்ணகியின் நிலையில்நின்று—வளர்ந்த தாடியும், ஒளிபடைத்தகண்களும் உறுதி கொண்ட நெஞ்சுப் கொண்டவர்களாய் சத்தியம் என்னும் ஆயுதத்தைக் கையில் ஏந்திசிறைச்சாலையிலே இருந்தபடி சிங்கள ஏகாதிபத்தியத்திடம் நீதி கேட்டு தங்கள் உயிரை அர்ப்பணித்து வருகின்றனர் நமதுஉடன்பிறப்புக்கள்.**

**அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்றாகும் என்ற உண்மையை கற்பின் செல்வி கண்ணகி அன்று நிரூபித்துக் காட்டியதுபோல—அரசியல் பிழைத்து அல்லவை செய்துவரும் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கும் நிச்சயம் ஒருநாள் அறம்கூற்றாகியேதீரும் என்கிற அசையா நம்பிக்கையுடன் சிறைச்சாலையிலே புதிய சிலப்பதிகாரத்தைப் படைத்து வருகின்றனர் — உண்ணாது செத்து மடிகின்றனர் நம் இரத்தத்தின் இரத்தங்கள்!**

"என்றோ ஒருநாள் போகப்போகின்ற உயிர் தமிழ் ஈழத் தாயகத்தின் விடுதலைக்காகப் போகட்டும்! நோயினால் இறக்கவில்லை; வயது முதிர்ச்சியினால் சாகவில்லை; வாழ வேண்டிய வயதில் எத்தனை நாள் சிறைகளிலே அழிவது? தமிழன் சாகிறான் அவன் அடிமையாகச் சாகவில்லை; ஏன் அவன் ஒருநாள் சுதந்திரத்துக்காகச் சாகிறான்! இது இலட்சிய மரணம்! எம்மைப் பெற்றெடுத்த தாயை — உடன்பிறப்புக்களை—உற்றாரைப்பிரிந்திருக்கிறோம்; மரணத்தின்பின் முற்றாகப் பிரிகின்றோம். ஆனால் நாம் பிறந்த தமிழ் மண்ணை தமிழன்னையை—தமிழினத்தைவிட்டுப் பிரியப் போவது இல்லை; நாம் மீண்டும் தமிழாராய்ப் பிறப்போம்! மீண்டும் போராடுவோம்!

**"தமிழ் ஈழத்தின் விடுதலைக்காகப் போராடமுடியாதவாறு சிறைச்சாலைகளிலே ஆண்டுக் கணக்காக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் நாம், சிறையிலிருந்தவாறே நமது கடமையைச் செய்வோம்! எமது மரணத்தின் பின்னராவது நீதியும் தர்மமும் வெற்றி பெறட்டும் எமது மரணத்திலிருந்து 'சுதந்திரத் தீ' பரவட்டும்! கூட்டுச்சேரா நாடுகளின் மாநாடு எங்கள் பிணத்தின்மீது நடைபெறட்டும்".**

என்கிற உறுதியான தமது இறுதி முடிவை—உணர்ச்சியலை பொங்கும் வரவரிகளில் பிரதமருக்கும் தமிழ் ஈழநாட்டு மக்களுக்கும் அறிவித்துவிட்டு — சாகும்வரை உண்ணாவிரதம் என்கிற தமது சத்தியப்போரில் ஈடுபட்டிருக்கிறார்கள் நம் தங்கத்தமிழ் இளைஞர்கள்!

**உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்,**
**மாவை சேனாதிராசா,**
**பொ. சத்தியசீலன்,**
**பொ. வ திசைவீரசிங்கம்,**
**த. முத்துக்குமாரசாமி.**

ஆகியஐந்துஇளைஞர்கள்ஆகஸ்ட்5ம்நாளிலிருந்து உண்ணா நோன்பை ஆரம்பித்திருக்கிறார்கள். சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தால், அதன் விளைவுகள் என்ன—எத்துணை துன்பங்களையும், கொடுமைகளையும் சந்திக்க நேரிடும்—என்பதையெல்லாம் முன் கூட்டியே அலசி ஆராய்ந்து ஆழமாகச் சிந்தித்துத்தான் இந்த முடிவை எடுத்து அதனை செயற்படுத்துகின்றார்கள் நம்மவர்கள்—நமது சகோதரர்கள்!!

## அரசியல் மேடை

காசி ஆனந்தன் மூன்றரை ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்து வருகிறார்; சத்தியசீலனும், திசைவீரசிங்கமும் மூன்றரை ஆண்டுகள் தொடர்ச்சியாக சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். மாவை சேனாதிராசாவும், முத்துக்குமார சாமியும் மூன்றாண்டுகள் சிறைவாழ்வை அனுபவித்து வருகின்றனர்! விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் இவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்வதன் மூலம் அரசின் மனச்சாட்சியை இப்போது இடிக்க ஆரம்பித்துள்ளனர்!

நண்பா, உண்ணாவிரதமிருப்பவர்களை அவர்களது இரத்த உறவினர்களான தாய், தந்தையா சகோதரர்கள் சென்று பார்ப்பதற்குக்கூட சிறை நிர்வாகம் தடைவிதித்துள்ளது. இளைஞர்கள் வெவ்வேறு சிறைகளுக்கு தனித்தனியே பிரித்து அனுப்பப்பட்டிருக்கின்றனர். வண்ணை ஆனந்தன் காலிச்சிறைக்கும், காசி ஆனந்தனும் சேனாதிராசாவும், மாத்தறை சிறைக்கும், சத்தியசீலனும் அல்போன்சோ மேரியும் நீர்கொழும்பு சிறைக்கும் இரவோடிரவாக மாற்றப்பட்டிருக்கின்றனர்! முத்துக்குமாரசாமியும், திசைவீரசிங்கமும் எந்தச் சிறையில் என்பது தெரியவில்லை!

**ஆனால் எந்தச் சிறையிலிருந்திடினும் — எத்தனைகோடி துன்பங்கள் எதிர்ப்படினும்—திட்டமிட்டபடி உண்ணாவிரதம் நடைபெற்றே தீரும் என்று இந்த இளைஞர்கள் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள்!**

சிறையிலிருக்கும் இளைஞர்களை பிரித்திடலாம் — வெவ்வேறு சிறைகளுக்கு மாற்றிடலாம்—ஆனால் அவர்களது ஒன்றுபட்ட இதயங்களிலிருந்து ஊற்றெடுக்கும் உணர்வுகளை—எவரால் பிரித்திட இயலும்?

**"பொங்கு வெறியர் சிறைமதிலுள் எனைப்**
**பூட்டி வைத்தாலும் — என்றன்**
**அங்கம் பிளந்து விழுந்து துடிக்க**
**அடிகள் கொடுத்தாலும்**
**தொங்கி அசைந்து மடிந்து தசையுடல்**
**தூள்பட நேர்ந்தாலும் — ஒரு**
**செங்களம் ஆடி வரும் புகழோடு**
**சிரிக்க மறப்பேனா?"**

என்று இலட்சிய முழக்கமிடும் நம் இளைஞர்களை—தங்கள் உயிரையே அர்ப்பணிக்கத் துணிந்தவர்களை—சிறைச்சாலை அதிகாரிகள் எத்தனை துன்புறுத்தியும் என்ன செய்திட இயலும்?

**வண்ணை ஆனந்தன்**
**சே. சிறீஸ்கந்தராசா**
**பூபதி பாலவடிவேற்கரன்**
**அ. வரதராசா**

ஆகிய இளைஞர்கள் ஆகஸ்ட் 8ம் நாளில் (அதாவது இன்று) தமது உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கிறார்கள். ஆகஸ்ட் 14ம் நாளிலிருந்து மேலும் ஏழு இளைஞர்கள் தங்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்க இருக்கிறார்கள்!

நண்பா, இவ்வாறு சிங்களச் சிறைக்கோட்டங்களிலே நமது கண்மணிகள் நாள்தோறும் அணுஅணுவாகச் செத்துக்கொண்டிக்கும் போது—கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் உயிர்பிரிந்துகொண்டிருக்கும்போது—அத்தியாகச் சுடர்கள் சிறிது சிறிதாக அணைந்துகொண்டிருக்கும்போது— நாம் வெளியே என்னசெய்யப்போகிறோம்? உண்டு உடுத்து—படுத்துறங்கி உணர்ச்சியற்ற ஜடங்களாக— சோற்றாலடித்த பிண்டங்களாக உல்லாச சல்லாப வாழ்வு வாழப் போகிறோமா? அல்லது நம் உடன்பிறப்புக்களைக் காப்பாற்றுவதற்காக நாம் பொங்கியெழப்போகிறோமா?

**'ஒருதமிழன் தமிழர்க்காய் உயிர் வாழ்கின்றான்—**
**உயிர் வாழ்வோன் தமிழர்க்கே**
**தனை ஈகின்றான்''**

என்ற புரட்சிக்கவிஞனின் வாக்குப்படி தமிழினத்துக்காக தம்மையே அர்ப்பணிக்கும் அருமைச் சகோதரர்களுக்காக நாம் சிலிர்த்தெழ வேண்டாமா? சிங்கள ஆட்சியின் அட்டூழியத்துக்கு எதிராகச் சீறியெழ வேண்டாமா? சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை கலங்காமல் வெறும் மந்தைகளாக — மனச்சாட்சியற்றவர்களாக நமது இனம் இருக்கலாமா?

சிறையில் நம் சகோதரர்கள் செத்துக்கொண்டிருக்க, பண்ணும் பரதமும், பாட்டும் கூத்தும், பாடசாலைகளும் எதற்காக? வேறு வேலைகள் அத்தனையையும் நிறுத்திவிட்டு நமது இளைஞர்களைக் காப்பாற்றும் இயக்கத்தில் நாம் உடனடியாக ஈடுபடவேண்டும்!

"சிங்கள வெறிபிடித்த ஆட்சியே! மனச்சாட்சியை குழிதோண்டிப் புதைத்துவிடாதே! எமது அருமைச் சகோதரர்களை சிறையில் போட்டு வதைக்காதே! அவர்களை பட்டினி போட்டுக் கொல்லாதே! அவர்களை விடுதலை செய்! உண்ணாவிரதம் இருக்கும் ஒரு இளைஞருக்கு ஓர் ஊறு நேர்ந்திடினும் 35 இலட்சம் தமிழ் மக்களும் பொங்கியெழுவார்கள்!" என்பதை அரசுக்கு உணர்த்திடவேண்டும்!

**பாடசாலைகளைப் பகிஷ்கரிப்போம! நம உடன்பிறப்புக்களை சிறையில் காவுகொடுத்துவிட்டு நம மாணவச் செல்வங்களுக்குப் படிப்பு எதற்கு?**

**உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு இலட்சக் கணக்கான தந்திகளை சிங்களப்பிரதமருக்கு அனுப்பிவைப்போம்! ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் இதைச் செய்யமுன் வரவேண்டும்.**

தமிழ்பேசும் மக்கள் அத்தனை பேரும்—தமிழ் அரசாங்கஎழுதுவினைஞர்கள், ஊழியர்கள் உட்பட — அனைவரும் அவசிய மேற்படும்போது வேலைநிறுத்தத்தில் இறங்குவோம்!

தமிழர் விடுதலைக்கூட்டணி ஆக்கித் தரும் திட்டங்களை செயற்படுத்துவோம்!

நீதி நியாயம் கோரி சிறையில் உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களை காப்பது—அதற்குவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வது — ஒவ்வொரு தமிழனின் கடமை! மனிதாபிமானமுள்ள ஒவ்வொரு மனிதனின் கடமை!!

**தாமதமின்றி இக்கடமையில் இறங்குவோம்! ஓய்ந்திருக்க நேரமில்லை** — **சிறையில் நம் உயிரனைய இளைஞர்களின் உயிருடன் விளையாடுகிறது சிங்கள அரசு! இதைப்பொறுப்பதில்லை— இனியும பொறுப்பதில்லை!! ஒன்றாக வாழ்வோம் — இன்றேல் ஒன்றாக மடிவோம்!**

**உன் அன்புத் தோழன்,**

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## தமிழ் ஆசிரியர்களின் தலை நிமிரட்டும்!

**ஒரு** சமுதாயத்தை உருவாக்குகின்ற—கட்டியெழுப்புகின்ற—புனிதமான பணியில் ஆசிரியர்களின் பங்கு மகத்தானது. இதனால்தான், தாய்க்கும், தந்தைக்கும் அடுத்தபடியாக தெய்வத்துக்கும் முன்னர் குருவை — அதாவது ஆசிரியரை வைத்தாகள் நமது முன்னோர்கள்! ஒரு சமுதாயத்துக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தி— அடிமையிருளைப்போக்கி—சுதந்திர உணர்வும், தன்னம்பிக்கையும் நிறைந்ததாக அதை கட்டியெழுப்பும் புனிதமான திருப்பணி ஆசிரியர்களுடையதே! அதனால்தான் ஆசிரியப் பணி, வெறும் வயிறு கழுவுதற்கான தொழில் என்கிற நிலையைக் கடந்து தூய்மையான சமுதாயப் பணியாக உயர்வடைகிறது!

நம்முடைய தமிழ் சமுதாயத்தைப் பொறுத்தவரை —நமது தமிழ் ஆசிரியர்கள் ஆசிரியத்தொழிலின் புனிதத்தையும், அதன் மகத்துவத்தையும் உணாந்ததுடன் நெடுங்காலமாக பணிபுரிந்து வந்திருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்கள் அடிமைச்சேற்றுள் சிக்கித்தவிக்கும் தமிழ்ச் சமுதாயத்துக்கு அறிவுச் சுடர்கொளுத்தி அறியாமையைப்போக்கி தெளிந்த நல்லறிவை யூட்டி வந்த காரணத்தினாலேதான் தமிழ் மக்கள் கல்வித்துறையில் தலை நிமிர்ந்து நிற்க முடிந்தது.

தமிழ்மொழியின் உயர்ச்சியிலும், வளர்ச்சியிலும் அதன் உரிமையிலும், தமிழ் சமுதாயத்தின் நல்வாழ்விலும் அக்கறைகொண்டு, 1960ம் ஆண்டு வரை— அதாவது பாடசாலைகள் அரசுடமையாக்கப்படும்வரை—தமிழுரிமை இயக்கங்களில் முன்னின்று உழைத்த தமிழாசிரியர்கள், பாடசாலைகள் அரசுடமையான பின்னர் தமிழுரிமை இயக்கங்களிலிருந்து ஏனோ படிப்படியாகப் பின் வாங்கினார்கள்! இட்மாற்றத்தைத் தவிர்ப்பதற்காகவோ —பதவி உயர்வை எதிர்பார்த்தோ — வேறு சலுகைகளை எகிர்பார்த்தோ — தலை நிமிர்ந்து தமிழுக்காக குரல் கொடுக்கவேண்டிய தமிழாசிரிய சமூகம், தன்மானமிழந்து யார் யாருக்கோவெல்லாம் தாள் பணிந்து மண்டியிட்டது கண்டு தமிழினம் உள்ளம் பொருமியது; நல்லவர்கள் வேதனையடைந்தனர்; நாணித் தலை குனிந்தனர்!!

**இன்று தமிழ்பேசும் மக்கள் அத்தனைபேரும கட்சி கடந்த நிலையில் — கருத்துவேறுபாடுகளற்ற நிலையில்—ஒரே கொடியான உதயசூரியன் கொடியின்கீழ் — தமிழர் விடுதலைக் கூட்டணியின்கீழ் — சக்திமிக்க ஒரு தேசிய இனமாக ஒன்றுதிரண்டு சுயநிர்ணய உரிமைக்காக—சுதந்திரத்துக்காக குரல் கொடுக்கின்ற இன்றைய சூழ்நிலையில்—இந்த தமிழியக்கத்திலிருந்து—தமிழுக்கும், தமிழினத்துக்கும் வாழ்வு தருகின்ற இயக்கத்திலிருந்து—தமிழ் சமுதாயத்தின் அடித்தளமாக — அறிவு ஊற்றுக்களாக விளங்குகிற தமிழாசிரியர்கள் ஒதுங்கிவிட முடியாது! தமிழர் விடுதலைக் கூட்டணியின முக்கிய அங்கமாக விளங்கவேண்டிய கடமை தமிழ் ஆசிரியர்களுக்கு உண்டு.**

இதனை நன்கு உணர்ந்துதான், தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் இணைந்து இயங்கவேண்டுமென்ற அருமையான தீர்மானம் ஒன்றை மேற்படி சங்கத்தின் ஆண்டுக்கூட்டத்தில் அதன் திருகோணமலைக் கிளை கொண்டுவர முடிவு செய்துள்ளது.

**திருகோணமலைக் கிளையின் தீர்மானத்தை ஏற்று நிறைவேற்றி தமிழர் ஆசிரியர் சங்கத்தை தமிழுரிமைப் போராட்டத்துடன் மீண்டும் இணைப்பது தமிழ் ஆசிரியர்களின் நீங்காக்கடமையாகும். தமிழ் ஆசிரியர் சங்கம் இந்த புரட்சிகரமான துணிகரமான முடிவை எடுக்குமானால்—ஏனைய தமிழாசிரிய சங்கங்களும், இந்த முடிவுக்கு வந்தேதீரவேண்டிய சூழ்நிலை தோன்றும்! எனவே இதற்கு ஆரம்ப கர்த்தாக்களாக விளங்கும் திருகோணமலைக் கிளையினரை தமிழ்பேசும் மக்களின் சார்பில் வாழ்த்துகிறோம்!**

"1971ம் ஆண்டுக்குப்பின் நடைபெற்ற ஆசிரியர்கள் நியமனங்களில் கல்வி அமைச்சு அறிவித்தபடி தமிழர்களுக்கு 12 விகிதாசாரப்பங்கும் கிட்டவில்லையென்பது அண்மையில் தேசிய அரசுப்பேரவையில் (காவலூர் பா. உ. வின் கேள்விக்கு) அளித்த பதிலிலிருந்து தெரிகிறது. ஆசிரிய நியமனங்களில் 12 விகிதப்பங்குகூட கிட்டவில்லையென்பதோடு, நாம் அப்பங்கில் சுரண்டப்பட்டுவருகிறோம். குடிசனக்கணக்கெடுப்பின்படி எமக்கு 20 வீதம் ஒதுக்கப்படவேண்டும். ஆனல் 12 வீதம் மட்டுமே ஒதுக்கப்படும் என்று கூறிய கல்வியமைச்சர் அதைக்கூட முழுமையாக ஒதுக்கவில்லை. எங்களுக்குரிய பங்கை 'எங்களுக்கு தாருங்கள் என்றுதான் கேட்கிறோம்."

என்று மட்டக்களப்பில் ஒரு கூட்டத்தில் பேசிய இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. டி. எஸ். வணசிங்கா உரிமைக்குரல் எழுப்பியிருக்கிறார்.

தமிழ் மக்கள் கல்வித்துறையில் மட்டுமல்ல ஒவ்வொரு துறையிலும் இப்படித்தான் ஒதுக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள்! சிங்களவர்களிடம் எங்களுக்குரிய நியாயமான பங்கைப் பெறமுடியாது என்பது முடிவாகத் தெரிந்த பின்புதான், தமிழினம் தன்னைத்தானே ஆளவேண்டும்—தனிநாடாக வாழவேண்டும் என்று தமிழர் விடுதலைக்கூட்டணி போராடி வருகிறது.

எனவே தமிழ் இனத்தின் இந்தத்தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும், அப்போராட்டத்தை முன்னின்று நடத்தும் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் அரசாங்க [illegible] முன்னுதாரணத்தைப் [illegible] இனிமேலாவது முன்போல் பக்கபலமாக இருக்கும் என்று நம்புகிறோம்.

# திருமதியின் யாழ் வருகையும் நடராசாவுக்கு கழுத்தறுப்பும்!

வருவார் வருவார் என்று எதிர்பார்த்த திருமதி துரையப்பா, வந்து விட்டார் என்று ஒரு சிறு கூட்டம்கெக்கலிகொட்ட துரையப்பா ஸ்ரேடியத்தில்தோன்றினர். லஞ்சத்தில் ஊறியவர்கள் என்றும் பத்தாயிரம் பதினையாயிரமென்று வாரிச்சுருட்டியவர்களென்றும் கூறப்பட்ட கும்பலின் மத்தியில் குதூகலமாகக் காணப்பட்டர் டாக்டர் திருமதி துரையப்பா.

திருமதி துரையப்பா வந்ததும், ஊர்வலத்திற்கும், நேரத்திற்கும் கட்டுப்பாடிருப்பது தகர்ந்து விடும் என்று எண்ணிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் இஞ்சி தின்ற குரங்காக, இடித்த புளியாக ஏமாந்தனர். அரசியல் கலப்பில்லாத ஆட்டத்திற்கு ஊர்வலம் போவதுமா முடியாத காரியம் என்று கேட்டவர்கள் முழு ஆட்டை விழுங்கியோர் மாதிரிக் காணப்பட்டனர்.

மௌன ஊர்வலமும் இல்லை. நேரமாற்றமுமில்லை என்ற முடிவு கிடைத்ததும் திருமதியின் செல்வாக்கும் பூ! இவ்வளவுதானா என்று பொதுமக்கள் பேசிக்கொண்டனர். திருமதி துரையப்பாவை அரசியலில் இறங்கவேண்டுமென்றும் மன்றாடினார் விநோதன். யாழ்ப்பாணத்தில் படித்த மக்களும், அரசியல் புலிகளும், வாழும்போது அரசியலுக்குத் தகுதியான ஒரே ஒருவர் திருமதி தான் என்று திருமதி பாடினார் விநோதன். அவர்கள் அரசியல் அவ்வளவு தூரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது போலும்!

விசேட ஆணையாளரின் வீதிவலத்தை வெட்டி வீழ்த்து வேனென்று தம் பட்டமடித்துத் திரிந்த பேரின்பநாயகம் திரு. நடராசாவைப் பதவி இறக்கித்தான் சாப்பிடுவதென்று உபவாசமிருக்கிறாராம். திரு. நடராசா விசேட ஆணையாளராக இருக்கும்வரை தமக்கு ஆபத்தென்பதை நன்குணர்ந்தவர் தான் பேரின்பநாயகமும் அவர் கம்பனி லிமிட்டெட்டும்.

ப. நோ. கூட்டுறவுத் தலைவர் பதவி பறிபோகப்போவதாகப் பேசிக்கொள்ளப்பட்டபோது பேரின்பநாயகம் தமது பதவியை ஓடி ஆடிக் காக்காபிடித்துக் காப்பாற்றிவிட்டார். விசாரணையென்றும், வழக்கென்றும் விசேட ஆணையாளர் பயமுறுத்தியபோது குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறுக்கும் என்பதற்கிணங்க குறுகுறுத்துத்திரிந்த பேரின்பநாயகம் திருமதியின் வரவால் தோளைத் தட்டி நெஞ்சை நிமிர்த்தி நடக்கிறாராம்.

அம்மா வரட்டும் நடராசா ஐயாவை நடையைக் கட்டும் என்று சொல்வோம் என்போர் இப்போது அம்மாவை கொழும்பு மாநகருக்கு அனுப்பிவைத்திருக்கிறார்களாம். விசேட ஆணையாளர் பதவியிலிருந்து திரு. நடராசாவை இறக்கி வேறொருவரை நியமிப்பதென்றுதான் அம்மாவும் கொழும்பு புறப்பட்டுள்ளார். மூன்று தலைக் கழுதைகளின் ஆட்சி யாழ்ப்பாணத்திற்கு வருமென்றும் வேறோர் சாரார் பேசிக் கொள்ளுகின்றார்கள்.

திரு. நடராசா சமீபத்தில் ஒரு கூட்டத்தில் பேசியபோது வாரிச் சுருட்டியவர்களையும், வக்காலத்துவாங்கியோரையும் காட்டிக் கொடுத்து ஊழல் விவகாரக்களை அம்பலப்படுத்தி மாநகர சபை ஆட்சியை கட்டிக்காத்திருக்கிறேன். அம்மா எப்படிக் காவடி எடுத்தாலும் அரசாங்கம் என்னைக் கைவிடாதென்று கூறியுள்ளார். திருமதி துரையப்பா வருகையால் யாழ் மாநகர சபை விவகாரம் மெத்தவும் சூடுபிடித்துள்ளது. வந்த மனுஷியை கொஞ்ச நாட்களுக்கு ஓய்வெடுக்கவிடாமல் துரத்தியிருக்கிறார்கள் கொழும்புக்கு இதன் முதற் காரணம் திரு. நடராசாவை பதவி இறக்குவதாகும்.

திரு. நடராசாவை பதவி இறக்கினாலும் யாழ்ப்பாணத்தில் துரையப்பா சுதந்திரக்கட்சியும், நடராசா சுதந்திரக்கட்சியுமென இரு முகாம்கள் செயல்படும் என்றும் அடித்துக் கூறலாம்.

திருமதி துரையப்பா இங்கு வந்ததும், தான் தற்போது கம்யூனிஸ்ட் என்று சொல்லித்திரிந்த தமிழாசிரியர் ஒருவர், நான் இப்போது திருமதி துரையப்பா பக்கமென்று சொல்லி துரையப்பா இரங்கல் கூட்டத்திலும் பேசுவேனென்று" பேசியிருக்கிறாராம். அவர் அப்படிப்பேசிய கையோடு திருமதி துரையப்பா கையில் மூன்றாம்தர அதிபர் பதவியையும் ஒருக்கால் பார்த்து வருமாறு தொண்டனிட்டுள்ளாராம். மூன்றாம் தர அதிபர் பதவி கிடைத்தால் அவர் அரசியலுக்கும் முழுக்குப் போடலாம். அதற்கு மிஞ்சிப்போன அவரால் முடியாது. தமிழரசுக் ஆதரவாளர்களும் அவரை மேடை ஏறிப் பேசவிடமாட்டார்கள்அவர் தமிழரசுக்கட்சிக்காகப்பேசி தொண்டைத் தண்ணீர் வற்றியவர். இப்போதைக்கு இதுபோதும். பொறுத்திருங்கள்.

கடைசியாகக் கிடைத்த செய்தியின்படி நடராசாவுக்கு ஆணையாளர் பதவிலிருந்து கழுத்தறுப்பு நடைபெற்றுவிட்டதாக தெரிய வந்துள்ளது.

— அப்பலோ

## நாடெங்கும்...

1-ம் பக்கத் தொடர்

நாடெங்கும் அனுதாப உண்ணுவிரதங்கள் 5-8-76 முதல் நடைபெற்றுவருகின்றன. இந்த அனுதாப உண்ணுவிரதங்களில் ஏராளமான இளைஞர்களும், பெண்களும், மாணவர்களும் ஈடுபட்டு வருகின்றனர்.

திருகோணமலையில் காளி கோவில் முன்றலில் 5-8-76 காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணிவரை நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களும் தாய்மார்களும் உண்ணுவிரதமிருந்தனர். திருகோணமலை தமிழ் இளைஞர் பேரவையும், தமிழர் விடுதலைக் கூட்டணியும், இதை முன்னின்று நடத்தின.

கொழும்பில் தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில் ஒருநாள் அடையாள உண்ணுவிரதமும், தமிழ் மகளிர் பேரவையின் பிரார்த்தனையும் 6-8-76ல் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

பட்டிருப்புத் தொகுதியிலுள்ள குருக்கள் மடத்திலும் கிளிநொச்சித் தொகுதியிலுள்ள யோகபுரத்திலும் 5-8-76 வியாழக்கிழமை ஒருநாள் உண்ணுவிரதம் நடைபெற்றது.

மட்டக்களப்பில் 7-8-76 சனிக்கிழமை அடையாள உண்ணுவிரதம் தொடங்கி, 8-8-76 ஞாயிற்றுக்கிழமை முடிவடையும் த. இ. பே. மட்டக்களப்புகிளை இதை நடத்துகிறது.

காங்கேசன்துறை தமிழ் இளைஞர் பேரவை 8-8-76 ஞாயிற்றுக்கிழமை அடையாள உண்ணுவிரதம் ஒன்றை நடத்தவிருக்கிறது.

## ஏறுவூரில் த. வி. கூ. கிளைச் செயலகம் திறப்புவிழா

எதிர்வரும் 7-8-76 சனிக்கிழமை பி.ப.3-00 மணிக்கு பண்டைத் தமிழனின் பண்பாட்டு சிறப்புமிக்க பொங்கலுடன் இவ்விழா ஆரம்பமாகும்.

கிளைத்தலைவர் க. கணேசமூர்த்தி அவர்கள் தலைமை தாங்கி,உதயசூரியன் கொடி ஏற்றி வைப்பார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் துணைத்தலைவர் மு. மாணிக்கம் குத்துவிளக்கேற்றிக்கிளைச்செயலகத்தைக் திறந்து வைப்பார்.

மட்டுநகர் முதல்வர் செ. இராசதுரை த.வி. கூ.கல்முனைத் தொகுதித் தலைவர் டொக்டர் உதுமாலெவ்வை த.வி.கூ.சட்டத்துறை செயலாளர் சாம்தம்பிமுத்து பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு,சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்டத்துக்கு பிரதான கல்வியதிகாரியாக ஒரு தமிழர்கூட இருக்கக்கூடாதா?

## கல்வியமைச்சரிடம் அம்பாறைமாவட்டத் தமிழர் மகாசபை கேள்வி!

"65000 தமிழர்களையும் 63 தமிழ்ப் பாடசாலைகளையும் கொண்ட அம்பாறை மாவட்டத்துக்கு இதுவரை ஒரேயொரு தமிழரே பிரதான கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார். இப்போது பொத்துவிலில் கடமை பார்த்து வந்த ஒரேயொரு தமிழ் பிரதான கல்வி அதிகாரியையும் இடமாற்றம் செய்துவிட்டு, அவ்விடத்துக்கு வேறு ஒருவரை நியமித்துள்ளீர்கள். இது எந்த வகையில் நியாயமானது? 79 முஸ்லிம் பாடசாலைகளுக்கு 4 முஸ்லிம்கள் பிரதான கல்வி அதிகாரிகளாக பணிபுரியும்போது, 63 தமிழ்ப்பாடசாலைகளுக்கு ஒரேயொரு பிரதான தமிழ் கல்வியதிகாரி இருக்கக்கூடாதா? உடனடியாக பொத்துவிலில் கடமையாற்றிவந்த பிரதான தமிழ்க் கல்வியதிகாரியின் இடமாற்றத்தை இரத்துச் செய்து, அதே இடத்தில் அவரை மீண்டும் நியமிக்க நடவடிக்கையெடுங்கள்!"

—இவ்வாறு கூறும் மகஜர் ஒன்றை கல்வியமைச்சருக்கும் ஏனைய பத்துப் பிரமுகர்களுக்கும் அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசபை அனுப்பி வைத்திருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

"கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை ஆகிய தொகுதிகளை உள்ளடக்கியது அம்பாறை மாவட்டம். இந்த மாவட்டத்தின்கீழ் 38 தமிழ்க் கிராமங்களும் 25 முஸ்லிம் கிராமங்களும் வருகின்றன. இம் மாவட்டத்தில் 65,000 தமிழர்களும், 90,000 முஸ்லிம்களும் வாழ்கிறார்கள். அம்பாறையிலும் கல்முனையிலுமாக இரண்டு கல்விக்கந்தோர்கள் இங்கு இயங்குகின்றன. சிங்களப் பாடசாலைகளின் பிரச்சினைகளை அம்பாறை கல்விக்கந்தோரும், தமிழ்மொழிப் பாடசாலைகளின் பிரச்சினைகளை கல்முனை கல்விக்கந்தோரும் கவனித்துவருகின்றன. கல்முனை, நிந்தாவூர், சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பொத்துவில், ஆகிய கல்வி வட்டாரங்கள் கல்முனை கல்விக்கந்தோரின் நிர்வாகத்தில் வருகின்றன. இந்த மாவட்டத்தில் 63 தமிழ் பாடசாலைகளும், 79 முஸ்லிம் பாடசாலைகளும் 10 சிங்களப் பாடசாலைகளும் இருக்கின்றன.

இந்நிலையில் [illegible] முஸ்லிம் பாடசாலைகளுக்கும் [illegible] பொதுவாக 4 முஸ்லிம்கள் [illegible] பிரதான கல்வி அதிகாரிகளாக கடமையாற்றுகிறார்கள். பொத்துவில் பிரதான கல்வி அதிகாரி மட்டுமே தமிழராக இருந்தார். இவர் ஒருவரே 63 தமிழ்ப் பாடசாலைகளுக்கு பிரதான கல்வி அதிகாரியாக கடமையாற்றினார்.

இப்போது இவரையும் இடம் மாற்றி விட்டதன் மூலம் 63 தமிழ் பாடசாலைகளுக்கு பொதுவாக ஒரு தமிழ் கல்வி அதிகாரி கூட இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. 79 முஸ்லிம் பாடசாலைகளுக்கு 4முஸ்லிம்கள் கல்வி அதிகாரிகளாக கடமையாற்றுவது நியாயம் என்றால், 63 தமிழ்ப் பாடசாலைகளுக்கு ஒரு தமிழர் பிரதான கல்வி அதிகாரியாக இருப்பது எப்படித்தவறாகும்?

எனவே மீண்டும் பொத்துவில் பிரதான கல்வி அதிகாரியாக தமிழரையே நியமிக்கும்படியும், கல்முனை கல்வித் திணைக்களத்திற்கு தமிழ் அதிகாரிகளை அதிகரிக்கும் படியும் கேட்டுக்கொள்ளுகிறோம்!"

## சிங்களச் சிறை...

—1-ம் பக்கத் தொடர்

இளைஞர்கள் சென்ற மாதம் 12ம் நாள் (12-7-76) பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தார்கள். 23பேர் சாகும் வரை உண்ணாவிரதத்துக்கு தங்களை அர்ப்பணிக்கத் தயாரென தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து, சிறையிலிருந்த 15 தமிழ் இளைஞர்கள் விடுதலைசெய்யப்பட்டார்கள். இந்தப் பதினைந்து பேரில் ஏழுபேர் உண்ணாவிரதமிருக்கச் சம்மதம் தெரிவித்திருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. விடுதலை செய்யப்படாமலிருக்கும் எஞ்சிய 29 இளைஞர்களில் 16பேர் சாகும்வரை உண்ணாவிரதத்தில் குதிக்கிறார்கள். நிலைமையை அனுசரித்து எஞ்சியுள்ள அனைவரும் உண்ணாவிரதத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள்.

உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்ட திகதிக்கு முதல் நாள் உண்ணாவிரதமிருக்கப் போவதாக அறிவித்திருந்த இளைஞர்கள் வெலிக்கடைச் சிறையிலிருந்து காலி, மாத்தறை, கண்டி, நீர்கொழும்பு அனுராதபுரம் சிறைகளுக்கு வேறு வேறாகப்பிரித்து அனுப்பப்பட்டனர். எந்தச் சிறைக்கு மாற்றப்பட்டாலும், எவ்வளவு நெருக்கடிகள் நேர்ந்தாலும், தாம் திட்டமிட்டபடி சாகும் வரை உண்ணாவிரதத்தை குறிப்பிட்ட திகதியில் ஆரம்பிப்பது என்று ஏற்கெனவே இந்த இளைஞர்கள் தமக்குள் முடிவு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## கூட்டங்களில்...

—8-ம் பக்கத் தொடர்

"ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தும்மல் கிழவி என்றால், ஐக்கிய தேசியக்கட்சி இருமல் கிழவி — முதலாவது சீறிப் பாயும் நாகபாம்பு மற்றது நசுக்கிடாமற் கடிக்கும் கொடிய விஷப்பாம்பு."

— திரு க. துரைரத்தினம் பா.உ

(தமிழ் இளைஞர் பேரவை கொழும்புக் கூட்டத்தில்)

●

"எத்தனை மாற்றுத் திட்டங்கள் வந்தாலும் தமிழன் ஆளப்படும் நிலை மாறுமட்டும் அடிமை நிலை மாறாது— அவன் தன்னைத் தானே ஆள வேண்டும்"

திரு. வ. ந. நவரத்தினம் பா.உ.

(கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில்)

●

"பெற்றோர், சகோதரிமாருக்கு ஒரு தாழ்மையான வேண்டுகோள் — தீவிரமாக விடுதலை இயக்கத்தில் ஈடுபடும் மக்களை, சகோதரரைத் தயவுசெய்து தடை செய்யாதீர்கள் — தட்டிக் கொடுத்து இயங்கவையுங்கள்."

—ஆ. [illegible]

(கொழும்பு [illegible] அங்குரார்ப்பணக் கூட்டத்தில்)

## ● அனுராதபுரம் சிறையில்....!


முல்லைத்தீவில் வைத்து 23-6-76ல் கைது செய்யப்பட்ட பருத்தித்துறைத் தொகுதியைச்சேர்ந்த நான்கு தமிழ் இளைஞர்கள் இப்போது யாழ் கிங்ஸ் ஹவுசிலிருந்து அனுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள். தும்பளையைச் சேர்ந்த ச. சபாரத்தினம், கற்கோவளத்தைச் சேர்ந்த பொ. அம்பிகாபதி, க. சந்திரமோகன், யோகன் ஆகியோரே இந்த 4 இளைஞர்களாவர். இவர்கள் தமிழர் விடுதலையை நாடும் ஓர் அரசியல் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தின் பேரிலேயே கைதுசெய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

## உண்ணாவிரதப் புகைவண்டி ஊழியர் அறிக்கை

தமிழ் இளைஞர்கள் நீதி விசாரணைக்குட்படுத்தப்படாமல் சிறைக்குள் அடைத்து வைத்திருப்பதையிட்டும், அவர்கள் நீதி கேட்டு நடாத்தும் உண்ணாவிரதப் போராட்டத்தையிட்டு புகைவண்டிப்பகுதி ஊழியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

"அரசு தமிழ் இளைஞர்களை என்ன குற்றம் செய்தார்கள் என்று கூறாமல் வருடக்கணக்காக சிறையிலே வைத்திருக்கும் அநீதியான செயலைக்கண்டு துயருறும் எமது சங்கம், இதை எதிர்த்து சிறைவாசம் செய்யும் தமிழ் இளைஞர்கள் ஆகஸ்ட் 5ந் திகதி ஆரம்பிக்கவிருக்கும் உண்ணாவிரதப் போராட்டச் செய்தி கேட்டு மனம் பதறுகிறது. தமிழினத்திற்காக தம் வாழ்வையே அழித்துக்கொள்ளத் துணிந்துவிட்ட எமது சகோதர இளைஞர்களின் செயல் எல்லோரையும் சிந்திக்க வைக்கட்டும்!

"நீதிகேட்டுப் போராடும் ஈழத்தமிழ் இளைஞர்களின் கோரிக்கைகளை ஏற்று அவர்களை உடன் விசாரணைக்குட்படுத்தவேண்டும் அல்லது விடுதலை செய்யவேண்டும்" என்ற எமது சங்கச் செயற்குழுவின் வேண்டுகோள் பிரதமருக்கும், நீதி அமைச்சருக்கும் தந்திமூலம் அனுப்பப்பட்டுள்ளது.



பட்டிருப்புத்தொகுதியின் பல்வேறு இடங்களிலும், "திரு. பூ. கணேசலிங்கம் சட்டமறுப்பு சுவரொட்டிகளை ஒட்டினர்." படத்தில் திரு. கணேசலிங்கம் உதயசூரியன்கொடி பறக்கும் தனது ஜீப்புக்கு அருகில் நிற்பதையும், சுதந்திரன் ஆசிரியர் கோவை, மகேசன், ஈழவேந்தன் ரகுபதிபாலசிறீதரன் ஆகியோரையும் காணலாம்.

## உண்ணாவிரத

—6-ம் பக்கத் தொடர்

ஐநூற்றுக்கு மேற்பட்ட சிங்களவர்கள் குடியேறிவிட்டார்கள். நிலைமை இப்படியே போனால், கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் விரைவில் சிறுபான்மை நிலைக்கு தள்ளப்பட்டு அழிந்துபோகும் நிலை தோன்றும் இந்த அபாயத்திலிருந்து நம்மினம் மீளுவதற்கு தனித்தமிழ்ஈழம் ஒன்றே வழி!"

## பிரதமருக்கு..

—1-ம் பக்கத் தொடர்

ஞலோ வன்முறை பிரயோகிக்கப்படுமானால், அதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்.

இந்த இளைஞர்களை அவர்களது குடும்பத்தினர் சென்று பார்ப்பதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். வேறு எந்த நேரங்களையும்விட, இந்த நேரத்தில்தான், இளைஞர்களை சென்றுபார்ப்பதற்கு அவர்களது குடும்பத்தினர் அனுமதிக்கப்பட வேண்டும்.

—இவ்வாறு அத்தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரபல நாவலாசிரியர் கே. எஸ். ஆனந்தனின்

சாத்தான் வேதம் ஓதுகிறது!

புத்தம் புதிய சமூக தொடர் நவீனம்

சுடர் ஆடி இதழில் படியுங்கள்

விலை ரூபா 1.00 மட்டுமே

"மில்க்வைற் செய்தி" இதழ்-8

10 மில்க் வைற் நீல சோப், அல்லது 2 பார் சோப், அல்லது 2 நீம் சோப், அல்லது 2மெடிக்கேட்டட்சோப் அல்லது 2 மில்க்வைற் சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பி "மில்க்வைற் செய்தி இதழ்-8 ஐப்" பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண் 77 யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உண்ணாவிரதமிருக்கும் இளைஞருக்கு ஊறுநேரின் தமிழ்சமுதாயம் பொங்கியெழும்!'

## பட்டிருப்புத் தொகுதிக் கருத்தரங்குகளில் ஆட்சியாளருக்கு எச்சரிக்கை!

**"எவ்வித விசாரணையுமின்றி சிங்களச் சிறைச்சாலைகளில் ஆண்டுக்கணக்காக வாடி அணுஅணுவாகச் சாவதிலும் நீதிகேட்டுப் போராடி உண்ணாவிரதமிருந்து உயிர்விடத் தமிழ் இளைஞர்கள் முடிவுசெய்துவிட்டார்கள்! இந்த இளைஞர்களுக்கு ஏதாவது ஊறு நேர்ந்தால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அரசாங்கமே பொறுப்பேற்கவேண்டும். எங்கள் சொந்த உடன்பிறப்புக்களை சிறையில் வைத்து சிங்கள அரசு அநியாயமாகச் சாகடிக்குமானால் தமிழ் இளைஞர் சமுதாயம் பொங்கியெழும் என்பதை ஆட்சியாளர் புரிந்துகொள்ளவேண்டும்."**

—இவ்வாறு பட்டிருப்புத் தொகுதியில் சிறையிருக்கும் தமிழ் இளைஞர் வாரத்தையொட்டி கடந்த 31-7-76, 1-8-76 ஆகிய நாட்களில் நடைபெற்ற கருத்தரங்குகளில் கலந்துகொண்டு பேசிய சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் குறிப்பிட்டார். இக்கருத்தரங்குகளில் திருவாளர்கள் ஈழவேந்தன், ஆ. ரகுபதி பாலசிறீதரன் ஆகியோரும் உரையாற்றினர்.

### கழுதாவளையில்

31-7-76 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கழுதாவளையில் திரு. திராவிடத்தம்பியின் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் திருவாளர்கள் கணேசபிள்ளை, இரா. மதுரநாயகம், கவிஞர் தேனூரன், பூ. கணேசலிங்கம், முத்துப்பிள்ளை, கோவை மகேசன், ஈழவேந்தன், ரகுபதிபாலசிறீதரன் ஆகியோர் கொள்கை விளக்கம் அளித்தனர். திரு. அரசரத்தினம் நன்றி கூறினர்.

### துறை நீலாவணையில்..

31-7-76 மாலை 6-30 மணிக்கு துறை நீலாவணையில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு திரு. கோ. வீரக்குட்டி தலைமை வகித்தார். இக்கருத்தரங்கில் கவிஞர் தேனூரான், பூ. கணேசலிங்கம், ஈழவேந்தன், கோவை மகேசன் ஆ. ரகுபதிபால சிறீதரன் ஆகியோர் உரையாற்றினர். திரு. அப்பாக்குட்டி நன்றியுரை வழங்கினர்

### குருக்கள் மடத்தில்!

குருக்கள் மடத்தில் 1-8-76 காலை 10 மணிக்கு கருத்தரங்கு நடைபெற்றது. குருக்கள் மடம் தமிழ் இளைஞர் பேரவையினரால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த இக்கருத்தரங்கை திரு. பூ. கணேசலிங்கம் குத்து விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார் புஷ்பராசா, ஜெயக்குமார் ஆகிய இளைஞர்கள் தமிழ் ஈழத்தேசிய கீதம் இசைத்தனர். கருத்தரங்குக்கு பரமேஸ்வரன் (புரட்சி) தலைமைவகித்தார். திருவாளர்கள் சதா. நவரத்தினராசா, தங்கவேலாயுதம் ஈழவேந்தன், பூ. கணேசலிங்கம், கோவை மகேசன், ரகுபதி பாலசிறீதரன் ஆகியோர் உரைநிகழ்த்தினர். திரு. சுப்பிரமணியம் நன்றி தெரிவித்தார்.

### பழுகாமத்தில்

பழுகாமத்தில் மாபெரும் பொதுக்கூட்டமொன்று 1-8-76 ஞாயிறு பகல் 12 மணிக்கு நடைபெற்றது. திருப்பழுகாமம் திரௌபதி அம்மன் கோவிலடியில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு திரு. முத்துப்பிள்ளை தலைமை தாங்கினுர். கூட்டத்தில் திருவாளர்கள் கவிஞர் தேனூரன் ஆ. தங்கவேலாயுதம், பூ. கணேசலிங்கம், ஈழவேந்தன், கோவை மகேசன், ஆ. ரகுபதிபால சிறீதரன் ஆகியோர் உரையாற்றினர்.

### கோட்டைக் கல்லாற்றில்...

1-8-76 ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு கோட்டைக்கல்லாறு கிராமத்தில் திரு. இ. கந்தவனம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் திருவாளர்கள் பூ. கணேசலிங்கம், ஈழவேந்தன், ஆ. ரகுபதிபாலசிறீதரன், கோவை மகேசன் ஆகியோர் உரையாற்றினர்.

### ஈழவேந்தன்

இக்கருத்தரங்குகளில் திரு. ஈழவேந்தன் பேசும்போது குறிப்பிட்டதாவது:-

"நாம் இன்று தமிழ்ஈழம் கேட்கின்றோமென்றால்—ஏற்கெனவே இல்லாத புதிய தொன்றைக் கேட்கவில்லை. இருந்ததை, இழந்ததையே நாம் மீண்டும் புனர் அமைக்கப் போராடுகின்றோம். இன்று தமிழனுக்கு மட்டும் ஆபத்தில்லை — தமிழன் வணங்குகிற கடவுள்களுக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. நீர்கொழும்பு சிலாபப் பகுதிகளில் தமிழர்கள் சிங்களவர்களாக இனம் மாற்றப்பட்டனர். கிழக்கு மாகாணம் சிங்களவர்கள் குடியேற்றத்தால் கபளீகரம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் நம் இனம் தப்பிப்பிழைக்கவேண்டுமானால், தமிழ்ஈழம் அமைப்பதைத் தவிர வேறுவழியில்லை. நோய் முற்றிபோனால் அறுவை சிகிச்சை செய்துதான் தீரவேண்டும். தமிழ் ஈழம் அமைப்பது, தந்தை செல்வாவின் வார்த்தையில் சொல்லப்போனால்வில் லங்கமான காரியம்தான். ஆனால் தமிழினம் தப்பிப்பிழைக்க இதைவிட வேறுவழியில்லை. தந்தை செல்வாவின் காலத்தில, அவர் வழியில் தமிழ் ஈழத்தை நிறுவும் முயற்சிக்கு சிங்கள அரசு தடைக்கல்லாக இருக்குமானால், அடுத்து சிவகுமாரன் வழியிற செல்லும் இளைஞர்கள்தான் இயக்கத்தை நடத்துவார்கள். அவர்களுக்குப பதில் சொல்லவேண்டிய நிலைமை சிங்களவர்களுக்கு ஏற்படும். எனவே தந்தை செல்வா இருக்கும் காலத்திலேயே — தமிழ் மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கைக்கு இணங்கிவிடுவது சிங்களவர்களுக்கு நல்லது.

தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளைத்தலைவர் ஆ. ரகுபதிபாலசிறீதரன் தம்முடைய பேச்சில் குறிப்பிட்டதாவது:—

"இன்று குடும்பம் குடும்பமாக தமிழ்ஈழப் போராட்டத்தில் தமிழ் மக்கள் குதித்திருக்கிறார்கள். அண்ணனும் தம்பியும், தகப்பனும் மகனும், தங்கையும் தம்பியுமாக இன்று சிறைக்குள் வாடுகிறார்கள். சிறையென்பது இன்று எமக்கு சர்வசாதாரணமாகிவிட்டது. தமிழ்ஈழம் அமைப்பது இளைஞர்களின் முடிந்தமுடிபு. தரப்படுத்தலை எடுத்து விடுவதாலோ, வேலைவாய்ப்புக்களை இளைஞர்களுக்கு தந்துவிடுவதாலோ தமிழினத்தின போராட்டத்தை திசை திருப்பிவிடமுடியாது; தமிழ் இளைஞர்களை ஏமாற்றிவிடமுடியாது. 49 இளைஞர்களுக்கு பயந்து அவர்களை அடைத்துவைத்து இருக்கும் அரசு, ஒரு 400, அல்லது 4,000 இளைஞர்கள் தமிழ் ஈழத்துக்காகப் போராடப் புறப்பட்டால் என்ன செய்யும்? நம்முடைய இளைஞர்கள் எதற்கும் தயாராகிவிட்டார்கள். அவர்கள் போராடி தமிழ் ஈழத்தையமைத்தே தீருவார்கள்."

சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் பேசுகையில் கூறியதாவது:-

"சுதந்திரப் போராட்டம் நடக்கின்ற காலம்தான் ஒரு நாட்டின் வரலாற்றில் பொற்காலமாகும. அந்த முறையல தமிழ ஈழத்தின் சுதந்திரத்துககாக போராடும் ஒரு அருமையான வாய்ப்பு இந்தத்தலைமுறையினராகிய எமக்கு கிடைத்திருக்கிறது. 400 ஆண்டுகளுககுப் பின்னர்—போர்த்துக்கயருடன சங்கிலி மன்னன் காலத்தில் நடத்திய போராட்டததுக்குப் பின்னர்—இன்று மீண்டுமொரு விடுதலைப்போராட்டத்தை நடத்துகிறோம். 1948ம் ஆணடு முதல் இந நாட்டில் ஆட்சி பீடமேறிய சிங்களக கட்சிகள், திட்டமிட்டு தமிழனின் உரிமைகளைப பறித்து வந்திருக்கின்றன. பொடியுரிமை, குடியுரிமை, நிலவுரிமை, மொழியுரிமை, அத்தனையும் பறிக்கப்பட்டு 1972ம் ஆண்டு தமிழ் மக்கள் மீது பலவந்தமாகத்திணிககப்பட்ட புதிய அரசியல சட்டத்துடன், தமிழ்தேசிய இனத்தின் முடியுரிமையும், பூமிஉரிமையும் பறிக்கபபட்டுவிட்டது. இந்நிலையில் வரலாறு காட்டும் தீர்ப்பின்படி, தமிழினம் தன்னுடைய தமிழ்ஈழ நாட்டைத் தானே ஆள விரும்புகிறது — சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்து, தமிழ் ஈழத்தாயகத்தில மீண்டும் தனது ஆட்சியை நிறுவப்போராடி வருகிறது! தமிழ் ஈழப் போராட்டத்தைப்பற்றி இன்று உலகெலாம் தெரிந்துகொண்டுவிட்டது. லண்டன் போன்ற வெளிநாடுகளிலிருக்கும் எங்கள் சகோதரர்கள் தமிழ் ஈழப்போராட்டத்துக்கு ஆதரவு திரட்டுகிறார்கள். ஆகவே எப்பாடுபட்டாவது எத்தகைய தியாகத்தைச் செய்தாவது — இந்தத் தலைமுறையில் தமிழ் ஈழத்தாயகத்தை அமைத்தே தீரவேண்டும். இல்லாவிட்டால் வருங்கால சமுதாயம் எம்மைத் தூற்றும்"

திரு. பூ. கணேசலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

"தனித்தமிழ் தொகுதியென்று நாமெல்லாம் ஒரு காலத்தில் பெருமைப்பட்ட பட்டிருப்புத் தொகுதியில் இன்று இரண்டாயிரத்து

—5-ம் பக்கம் பார்க்க

## எழுச்சிக் குரலே! வேலே!

— மட்டுநகா முத்தழகு —

முருகன் தமிழன் அழகன் — எங்கள்
"மூத்த தமிழன் தலைவன்"
உருவே ஓம்சக்தி வடிவே — முருகன்
உடலில் வடித்த தமிழே!

கதிர்கா மத்தின் கடலே! — எங்களை
காக்க வந்த கரையே!
எதிர்கா லத்தின் மலையே! — தமிழின்
எழுச்சிக் குரலே! வேலா!
முருகன்...

திரும்பிய கோபுர முகமே — எங்களின்
தாந்தா மலையே; "அகமே!"
விரும்பும் மண்டூர்த் தலமே! — சிற்றுண்டியிலே
வாழும் திருப்பெருந் துறையே!

சந்தனச் சோலையின் தமிழே! — உலகே!
சங்க மமாகும் மணமே!
வந்தனைக் குரியவேல் முருகா — எங்கள்
வளரும் தமிழே! வணக்கம்

## விடுதலையாகிய வீர இளைஞர்களுக்கு விடுதலைக் கூட்டணியின் பாராட்டு!

"துரையப்பா கொலை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களுக்காக நீதிமன்றத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி வாதாடும். அநியாயமாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள இந்த இளைஞர்களை வழக்காடிக் காப்பாற்றுவது நமது கடமை. இது தமிழ் பொதுமக்களின் பொறுப்புமாகும். ஆகவேதான் துரையப்பாவின் வழக்கை நடத்துவதற்கு வேண்டிய செலவுகளுக்காக வழக்கு நிதி சேகரிக்கின்றோம்.

—இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பணிமனையில் அண்மையில் விடுதலையான 15 தமிழ் இளைஞர்களுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பு கூட்டத்தில் பேசிய கூட்டணியின் செயல் அதிபர் நாவலர் அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

விடுதலையாகிய வீரத் தமிழ் இளைஞர்களுக்கு உதயசூரியன் சால்வைகளை நாவலர் போர்த்தி, அவர்களைப் பாராட்டினர்.

சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் உரையாற்றுகையில், தமிழ்த் தலைவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள வழக்கில், தலைவர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டாலென்ன, வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டாலென்ன, இது நமது விடுதலை இயக்கத்துக்கு கிடைத்த ஒரு வெற்றியாகும். இந்த வழக்கின்மூலம் தமிழினத்தின் விடுதலைக் கோரிக்கையை உலகறியச் செய்விட்டோம் என்று குறிப்பிட்டார்.

திருமதி அமிர்தலிங்கம் பேசுகையில் "ஒரு நாள் சுவரொட்டி ஒட்டிவிட்டால், எமது சுதந்திரம் கிடைத்துவிடாது; ஒவ்வொரு நாளும் இப்படியான — இதையும் விடத்தீவிரமான இயக்கங்கள் தொடர்ச்சியாக நடந்தால்தான் அரசு கண் திறக்கும்—எங்கள் இலட்சியம் வெற்றிபெறும்" என்றார். இளைஞர்களின் தியாகத்தைப் பார்க்கும் போது தலைவர்கள் சிலர் பின்னுக்குசெல்ல வேண்டிய நிலையிலேயிருக்கிறார்கள் என்று திருமதி அமிர்தலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்கமாக அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் இயங்கும்!

## ஆண்டுக் கூட்டத்தில் தீர்மானம் ஒருமனதாக அங்கீகாரம்!

**தமிழ்த் தொழிலாளர்களின் இலட்சியங்களையும் அபிலாஷைகளையும் அடைவதற்கு தமிழினத்தின் ஏகோபித்த விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணியை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு ஆதரிப்பதெனவும் கூட்டணியின் செயல் திட்டங்களுக்கு சங்கம் தனது ஆற்றலுக்கேற்றவரை ஒத்துழைப்பும், உதவியும் நல்குவதன் மூலம் தமிழினத்தினதும் அதன் அங்கமான தமிழ் தொழிலாளர்களினதும் சுதந்திரத்திற்கு உழைப்பதெனவும் யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் 31-7-76ல் நடைபெற்ற அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் 15 வது மாநாட்டில் ஏகமனதான தீர்மானம் எடுக்கப்பட்டது. தாய்ச்சங்கத்தின் சார்பில் கொண்டு வரப்பட்ட இத்தீர்மானம், கோஷ்டிப் பூசல்கள் கடந்த நிலையில் சங்க உறுப்பினர்கள் அனைவராலும் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பலத்த கரகோஷத்துடன் அங்கிகரிக்கப்பட்டது.**

மொழிவழித் தொழிற் சங்கமொன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்கமாக இயங்குவதென்று பகிரங்கமாக முடிவு எடுத்தது இதுவே முதல் தடவையாகும். இத்தகைய தீர்மானத்தை துணிகரமாக எடுத்ததன் மூலம், ஏனைய மொழி வழித் தொழிற்சங்கங்களுக்கும் இது விஷயத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் வழிகாட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அரசாங்க எழுதுவினைஞர் சங்க நிர்வாகத்தைக் கைப்பற்றுவதில் பல்வேறு குழுக்களிடையே போட்டியேற்பட்டிருந்தாலும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்கமாக சங்கம் இயங்க வேண்டும் என்ற முடிவு அனைவரது ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

விசாரணையின்றி சிறையில் இளைஞர்களை ஆண்டுக்கணக்காக அடைத்து வைத்திருப்பதைக் கண்டித்தும் அவர்களை விடுதலைசெய்யக்கோரியும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது அடிக்கடி நடைபெற்றுவரும் இராணுவ பொலிஸ் தாக்குதல்களைக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு அரசாங்கத்தைக் கோரியும், திருகோணமலையில் அரசாங்க அதிபர் மேலதிக அரசாங்க அதிபர் உதவி அரசாங்க அதிபர்போன்ற உயர் பதவிகளில் சிங்கள அதிகாரிகளை நியமித்திருப்பதை கண்டித்து அவ்விடங்களுக்குத் தமிழ் அதிகாரிகளை நியமிக்கக்கோரியும், தமிழ் பிரதேச உள்ளூராட்சிமன்றங்களின் ஆணையாளர்களாக சிங்களவர்கள் நியமிக்கப்படக்கூடாதென்றும், தமிழரே நியமிக்கப்படவேண்டுமென வற்புறுத்தியும், மேலும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றபோது முந்திய செயற்குழுவுடன் போட்டியிடவிருந்த இராமநாதன் குழுவினர், போட்டியிலிருந்து தாம் வாபஸ் பெறுவதாக கூறிவிட்டு அங்கிருந்து வெளியேறினர்.

நிர்வாகிகள் தேர்தலில் மீண்டும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நம்பிக்கையைப் பெற்ற முன்னாள் நிர்வாகிகளே அதிகப்படி பெரும்பான்மை வாக்குகளினால் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவராக க. சோதிலிங்கமும், பொதுச் செயலாளராக இ. பேரின்பநாயகமும், பொருளாளராக இ. சதாசிவமும், துணைத் தலைவர்களாக திருவாளர்கள்: க. குலநாயகம், சி. சோதிநாதன் ஆகியோரும், துணைச் செயலாளர்களாக திரு. சி. இரத்தினவடிவேல் கா. சிவசிதம்பரம் ஆகியோரும், துணைப் பொருளாளர்களாக திரு. சி. சண்முகம், ந. சிவரஞ்சன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

செயற்குழு உறுப்பினர்களாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் நம்பிக்கையைப் பெற்று போட்டியிட்ட 23 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் ஆகக் கூடுதலான வாக்குகளை கொழும்பு தொழில் திணைக்களத்தில் வேலைசெய்பவரும் தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக்கிளைத் தலைவியுமான செல்வி திலகவதி கணபதிப்பிள்ளை பெற்றிருந்தார்.

### சமபந்தி போசனம்!

சாவகச்சேரியில் உள்ள டச்சு வீதியில் வசிக்கும், சி. நவரத்தினம் (நெசவு ஆலை அதிபர்) அவர்களின் மகன் சிவகுமாரன் அவர்களது அந்தியட்டிக் கிரிகைகள் 31-7-76ல் நடைபெற்ற போது சாதி, சமய வேறுபாடின்றிய ஓர் சமபந்தி போசனம் நடைபெற்றது. கூட்டணி ஆதரவாளர்களும் வ. ந. நவரத்தினம் பா. உ. வும் அன்னாரினது உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் சமபந்தி போசனம் செய்தனர்.

# கிராமங்களில் ஏற்பட்ட தமிழுணர்ச்சி! பத்தமேனி இளைஞர்களின் சாதனை

## சிறையிருக்கும் இளைஞர்களுக்காக பிரார்த்தனை!

சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களின் விடுதலைக்காக யாழ் மாவட்டத்தில் கோப்பாய் தொகுதியிலுள்ள பத்தமேனிக் கிராமத்தில் காவடி எடுக்கப்பட்டது. கோப்பாய் கோமான் வன்னியசிங்கம் கட்டிக்காத்த அரசியல் வழியில் அச்சுவேலியிலுள்ள பத்தமேனியில் இளைஞர்கள் முன்வந்து,சிறையிருக்கும் இளைஞர் விடுதலைக்காகக் காவடி எடுத்தது இதுதான் முதற்தடவை. அச்சுவேலிக் கிராமசபை எல்லைக்குட்பட்ட பத்தமேனி, கதிரிப்பாய், வறணன் முதலிய குக்கிராமங்களைச் சேர்ந்த வாலிபர்கள் தாமாக முன்வந்து அச்சுவேலிக் கிராம மக்கள் முன்சென்று சிறையில் வாடும் தமிழ் இளைஞர்கள நிலைபற்றிப் பிரசாரம் செய்தனர். இதன் காரணமாக ஆண்கள், பெண்கள், சிறுவர் சிறுமியர் 26-7-76 அன்று திங்கட்கிழமை பத்தமேனிமிட்டிலாங்கூடல் ஆலயத்தில் ஒன்று கூடினர்.

### மத ஒற்றுமை

அன்று காலை காவடி நேர்த்தி எடுக்கும் இளைஞர்களும் பெரியவர்களும் தமிழ் இளைஞர் விடுதலைக்காக பத்தமேனி அர்ச் சூசையப்பர் ஆலயத்தில் கிறீஸ்த வாலிபர்களுடன் ஒன்று சேர்ந்து காலைப் பூசையின் போது பிரார்த்தனையில் ஈடுபட்டனர். இதன் பயனாக மாலையில் ஆலயத்தில் நடந்த காவடி வைபவத்தின்போது கிறீஸ்தவ மக்களும் ஒன்று திரண்டு வந்துடன் காவடி எடுத்த வாலிபர்களை தமது பகுதிக்கூடாக வரவேண்டுமென்று பணித்து காவடி ஊர்வலம் தமது பகுதிக்கூடாகச் சென்றபோது பூரண கும்பம் வைத்து வரவேற்றனர். கிறிஸ்தவர்களும், சைவ மக்களும் ஒரு நிகழ்ச்சிக்காக ஒன்று கூடி இரு ஆலயங்களிலும் பிரார்த்தனையில் ஒன்று சேர்ந்தது இதுதான் முதற் தடவை. தமிழ்மொழி விடுதலைக்கும், நாட்டு விடுதலைக்கும் இவர்கள் கோப்பாய் கோமான் காலத்திலிருந்தே ஒன்றுபட்டு வருவதும் குறிப்பிடத் தக்கது.

### பொலிசார் வந்தனர்

இவ் இளைஞர்கள் இரு ஆலயங்களிலிருந்து காவடி எடுத்ததன் மூலம் கிராமத்தில் ஒரு வித அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி விட்டார்கள். சுமார் 3மணிக்கு மிட்டிலாங்கூடல் ஆலயத்தில் திரண்ட வாலிபர்கள் புதுமையான அனுபவத்தையும் அன்று பெற்றனர். காவடி எடுக்கும் முயற்சிகளில் மக்களும் இளைஞர்களும் ஈடுபட்டிருக்கும் போது திடுதிப்பென்று இரு ஜீப்புகளிலும், பொலிஸ் வானென்றிலும் பொலிசார் ஆலயத்திற்குவந்திருந்தனர். அவர்கள் கண்ணீர் புகை குண்டுகளையும், துப்பாக்கிகளையும் கொண்டுவந்திருந்ததுடன் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் கவசங்களையும் எடுத்து வந்திருந்தனர்.

### காலதேய அவர்களும் நடந்தனர்

எதிர்பாராத விருந்தாளிகளான பொலிசார் வருகை பக்தர்களிடையே ஒருவித பரபரப்பை ஏற்படுத்தியது. ஆனால் காவடி நேர்த்திக் கடனை முடிப்பதில் அவர்கள் முனைத்திருந்து குறிப்பிட்ட நேரத்தில் காவடி நேர்த்தியை ஆரம்பித்தனர். பத்தமேனி மிட்டலாங்கூடல் ஆலயத்தில் ஆரம்பித்த காவடி ஊர்வலம் அரைமைல் தூரமுள்ள பத்தமேனி ஞானவயிரவர் ஆலயம் சென்று அங்கு காவடி நேர்த்தியை ஆரம்பித்த வாலிபர்களுடன் சேர்ந்து 3மைல் தூரத்திலுள்ள செல்வச் சந்நிதி முருகனை நோக்கிச்சென்றது. வழிநெடுக மக்கள் பூரண கும்பம் வைத்து வாழ்த்தி காவடி நேர்த்தியில் இறங்கிய இளைஞர்களை பின்தொடர்ந்தனர். மக்கள் வெள்ளம் கரை புரண்டுதிரள பொலிசார் அச்சமுற்று அவர்களை ஊர்வலத்துடன் செல்லாது பஸ்களிலோ கார்களிலோ செல்லுமாறு கேட்டுக்கொண்டனர். காவடியுடன் மூன்று மைல் தூரத்தையும் நடந்து சென்ற பொலிசார் செல்வச் சந்நிதி ஆலயத்தைக் காவடி சென்றடையவே அவர்கள் வந்தவழி திரும்பிச்சென்றனர். அன்று 3 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை சுமார் 50 பொலிசாருக்கும் ஒரு ஏ. எஸ். பி.க்கும், இன்ஸ்பெக்டர் இருவருக்கும் மூன்று மைல் நடக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

### பாராட்டுவோம்

பொலிசாரின் திடீர் பிரவேசத்தால் பக்தர்களின் ஊர்வலம் தடைப்படுமோ என்று அஞ்சினராயினும் நூற்றுக் கணக்கான பெண்களும் அவ்வூர்வலத்தில் பங்கெடுக்கமுன்வந்தனர். வாலிபர்கள் செடில் குத்தியும், அலகுபாய்ச்சியும் காவடி எடுத்ததுடன் அன்று முழுவதும் உபவாசமிருந்து தமது வைராக்கியத்தையும் பக்தியையும், தமிழ்மொழிப்பற்றையும் வெளிக்காட்டினர். இளைஞர்களைப் பிடித்து அடிப்பதாலும், அடைப்பதாலும், பயமுறுத்துவதாலும் விடுதலை உணர்வையும் மொழிப்பற்றையும் அடக்கிவிடலாமென்று எண்ணிய விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். எவ்வித இன்னல் பட்டாலும் தமிழ் தாயின் சுதந்திரத்திற்கு நாமெல்லாம் தயாரென்று ஆட்சியாளருக்குச் சவால் விடுவதாக அன்றைய காவடி நிகழ்ச்சி இருந்தது. இந்நிகழ்ச்சிக்கு முன்னின்றுழைத்த பத்தமேனி இளைஞர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

# சங்கானை ப. நோ. கூ. சங்க மின்தறி ஊழியர் வேலைநிறுத்தம்

சங்கானை ப. நோ. கூ. சங்க இயக்குனர் சபையின் தலைவரும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி எடுபிடியுமான இராசசுந்தரத்தின் சர்வாதிகாரப் போக்கையும் சங்கத்தின் நிர்வாகச் சீர்கேடுகளையும், ஊழியர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும், ஊழியலையும் கண்டித்து சங்கானை ப. நோ. கூ. சங்க மின்தறி ஆலை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்துவருகிறார்கள். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள இந்த ஊழியர்கள் 23 கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர்.

மீண்டும் மீண்டும் ஏன் வேலைநிறுத்தம் என்பதை விளக்கி இலங்கைப் ப. நோ. ச. சம்மேளனத்தின் கிளையின் சார்பில் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் 10 பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சங்கானை ப. நோ. கூ. சங்க இயக்குனர் சபையின்மீது சுமத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

“அநியாயமாக சிறைபிடிக்கப்படும் இளைஞர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படும்போது அவர்களுக்குச் சட்ட உதவி வழங்கி அவர்களைக் காப்பாற்றுவதற்கு என்றும் தயாராக இருக்கிறோம்.”

— அ. அமிர்தலிங்கம்
(சிறையிருந்து விடுதலையாகிய 15 தமிழ் இளைஞருக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி அளித்த வரவேற்பில் பேசியது.)

●

“அரசியலமைப்புத் திட்டம் என்பது சிரஞ்சீவித் தன்மை வாய்ந்ததல்ல—அது மாற்றத்திற்கு இலக்காகக் கூடியது. ஆனால் இந்நாட்டு அரசியல் திட்டத்தை திருத்தினாலும்சரி—திருத்தாவிட்டாலும் சரி தமிழர்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.”

— செ. இராசதுரை பா உ.
(அக்கரைப்பற்றுக் கூட்டத்தில்)

●

“இந்நாட்டில் தனித்துவத்துடன் வாழ்ந்த தமிழர் நிலைமை நன்கு நிலைநிறுத்தப்படவேண்டும் இன்றைய நிலைமை எமக்கு மிகவும் சாதகமாக உள்ளது. இந்நேரத்தில் வயது சென்ற எம்மால் என்னசெய்ய முடியும் உம்மைப்போன்ற இளையவர்கள்தான் முன்னின்று இதற்காகப் போராடவேண்டும்” என்று திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் என்னிடம் கூறினார்.

— அ. அமிர்தலிங்கம்
(மூளாய் கூட்டத்தில்)

●

தேர்தல் எமது குறிக்கோள் அல்ல — இனவிடுதலையே எமது பிரதான குறிக்கோள்!”

—அ. அமிர்தலிங்கம்
(பண்டத்தரிப்பு கருத்தரங்கில்)

●

தற்போது நடைபெறும் வழக்கு விபரங்களையும் விசாரணை விபரங்களையும் ஒரு புத்தமாக அச்சடித்து இங்கும் வெளிநாடுகளிலும் வழங்குவதற்கு நடவடிக்கை யெடுத்து வருகின்றோம். தமிழிலும் ஆங்கிலத்திலும் இப்புத்தகம் வெளியிடப்படும்.

—சு நடராசா
(பண்டத்தரிப்பு கருத்தரங்கில்)

●

“தந்தைசெல்வா நாளையே ஒரு தபாலட்டையை எடுத்து நான் இனி உரிமைப் பிரச்சினைகளைக் கிளப்பமாட்டேன்; உங்களுடன் ஒத்துழைக்கிறேன்; உங்கள் சோசலிசத்தைப் பின்பற்றுகிறேன் என்று பிரதமருக்கு மடல் எழுதினால், இந்த சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களின் நிலை என்னவது? புயலில் சிதறுண்ட பஞ்சினைப்போல் இவர்கள் இருக்குமிடம் தெரியாமல் காற்றாய் பறந்து விடுவர்”

—வி தர்மலிங்கம் பா. உ.
(சுன்னாகம் சனசமூக நிலையக் கருத்தரங்கில்)

●

“தமிழர்கள் தம்மைத் தாமே ஆள்வதால் அவர்தம் பிரச்சினைகள் தீர்ந்து விடுமா என்று கேட்பதற்கே இடமில்லை. அப்படி ஒரு கேள்விக்கு இடம் இருக்குமாயின் சுதந்திரம் என்ற சொல்லுக்கே அர்த்த மற்றுப்போய்விடும். சுதந்திர போராட்டங்களும் அர்த்மற்றதாகிவிடும்”

—வி. தர்மலி ம்
(சுன்னாகம் கருத்தரங்கில்)

●

“நாம் கேட்பதும் போராடுவதும் — திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் ஜனாதிபதியாக வரவேண்டுமென்பதற்காகவோ —அல்லது திரு. அமிர்தலிங்கம் பிரதமராக வரவேண்டுமென்பதற்காகவோவல்ல. தமிழ் மக்கள் வாழுவதற்கு அவர்கள் தங்களைத் தாங்களே ஆளவேண்டுமென்பதே எங்கள் கொள்கை. தமிழ்ஈழம் தனிநாடாகியவுடன், தமிழ் மக்களின் விருப்பப்படி தமிழர் எவரும் அதை ஆளட்டும்!”

— வி. தர்மலிங்கம்
(சுன்னாகம் கருத்தரங்கில்)

●

“தலைவர்களின் தீவிரம் காணாது என்று குறைப்படுபவர்கள் எங்களுடன் சேர்ந்து இயங்கி இயக்கத்திற்கு தீவிரத்தைச் சேர்க்கட்டும். அல்லது எங்களை ஒதுக்கிவிட்டு இயக்கத்திற்கு தலைமைதாங்கி தீவிரமாக நடாத்தட்டும்”

— அ அமிர்தலிங்கம்
(கொழும்பு சரஸ்வதி மண்டபக் கூட்டத்தில்)

—5ம் பக்கம் பார்க்க


**செல்லமகால்** எம்.ஜி.ஆர். நடித்த

**அரச கட்டளை** (புதிய கொப்பி)

**20-ம் திகதி முதல்**

**சிவாஜி** நடித்த

**அன்பே ஆருயிரே**

**றீகல்** (மட்டுநகர்)

சுஜாதா, கமலஹாசன், விஜயகுமார், லீலாவதி நடித்த

**‘அவள் ஒரு தொடர் கதை’**

**2-வது வாரம்**

**கெபிட்டி**

தேங்காய் சீனிவாசன், சுபா
தங்கவேலு, ஜோதிலட்சுமி,
சோ, மனோரமா,
கோபாலகிருஷ்ணன்.
நடித்த

**உங்க வீட்டு கல்யாணம்**

**கிங்ஸ்லி** 4வ-து வாரம்

முத்துராமன், விஜயகுமாரி, ரவிச்சந்தர்
நடித்த

**அமுதா**

**கெப்பிட்டல்**

ஜெய்சங்கர், பி. பானுமதி, நிர்மலா,
சுந்தரராஜன் மற்றும் பலர் நடித்த-

**எடுப்பார் கை பிள்ளை**

(ஈஸ்ஸ்ட்மன் கலர்)

**பிளாசா** 6-8-ந் திகதி வரை

**சரசையா**

**13-ம்திகதிமுதல் தங்க பதக்கம்**

**வெலிங்டன்** 3-வது வாரம்

(யாழ் நகர்)

சிவகுமார், ஜெயசித்ரா, கமலகாசன், —நடித்த

**தேன் சிந்துதே வானம்**

**லிடோ** (யாழ் நகர்)

**உங்க வீட்டு கல்யாணம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1976ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 8-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.